## தங்காலை நகர சபை
## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 11 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தங்காலை நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட களியாட்ட வரி ரூபா 135,200 தொகையினை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் வைப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | வைப்புச் செய்திருந்த களியாட்ட வரி தொகையில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டு மீதித் தொகையை திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது வழங்குகள் தாக்கல் செய்த வகையில் பெற வேண்டிய டென்டர் வருமானம் ரூபா 50,655 தொகை குறைவாகக் கணக்கீடு செய்திருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் கூட்டுத்தொகை ரூபா 60,205 தொகைக்கான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அந்த தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 702(3) | ஒப்பந்த வேலைகள் தொடர்பாக கையொப்பமிடப்படும் உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்து இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | ஒப்பந்த வேலைகளின் போது நி.பி.702(3) இன் படி செயற்பட்டு உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படும். |
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் 2008 பெப்ரவரி 01 திகதிய இலக்கம் 1534/18 கொண்ட வர்த்தமானி | செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ள 04 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களின் கட்டண அறவீடு செய்து அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 03 வர்த்தக நிலையங்களின் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் தற்போது பெற்றிருந்ததுடன் ஏனைய வர்த்தக நிலையத்தில் அனுமதிப்பத்திம் பெற்றுக் கொள்ளும்படி எழுத்துமூலம் அறிவித்துள்ளேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,522,614 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,988,438 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 6,200,000 | 6,968,445 | 6,817,032 | 1,355,210 | 3,100,000 | 3,075,996 | 3,426,540 | 394,406 |
| வாடகை | 11,709,700 | 10,640,705 | 10,503,241 | 82,459 | 11,777,100 | 10,292,685 | 5,249,302 | 321,606 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,153,000 | 891,252 | 891,252 | - | 1,249,000 | 816,672 | 815,642 | - |
| ஏனைய வருமானங்கள் | 21,799,500 | 15,244,506 | 14,904,465 | 14,875,983 | 19,311,500 | 15,342,565 | 11,138,603 | 14,457,168 |
| மொத்தம் | 40,862,200 | 33,744,908 | 33,115,990 | 16,313,652 | 35,437,600 | 29,527,918 | 20,630,087 | 15,173,180 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு வருமான நிலுவை ரூபா 15,173,180 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 33,744,908 தொகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஒட்டு மொத்த வருமானம் ரூபா 48,918,088 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 33,115,990 தொகையாகக் காணப்பட்டமையால், வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 68 சதவீதம் காணப்பட்டடது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | வருட இறுதியில் காணப்பட்ட நிலுவையில் வீதரியும், வாடகை மற்றும் ஏனைய வருமானங்களில் இது வரை ரூபா 1,382,045 தொகை அறவிடப்பட்டதுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதிவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 394,406 தொகையாகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 6,968,445 தொகை ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 7,362,851 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 6,817,032 தொகையாகக் காணப்படமையால் வீதவரி மற்றும் வரி வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 93 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | வீதவரி அறவீடு செய்யும் முன்னேற்றம் அதிகரிக்கப்பட வேண்டும். | வருட இறுதியில் காணப்பட்ட நிலுவையில் 2019 ஏப்ரல் 30 திகதி வரை ரூபா 301,169 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி யளவில் பெற வேண்டிய வீதவரியும் வரியும் ரூபா 1,355,210 தொகையாகக் காணப்பட்டதுடன் நிலுவையை அறவீடு செய்வதற்கு நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 திகதி அளவில் நிலுவையில் ரூபா 263,329 தொகை அறவிடப்பட்டதுடன், மீதியை அறவீடு செய்யும் போது ரூபா 1,000 தொகையை விட கூடிய நிலுவை உடைய வீதவரிகளுக்காக இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டது. |

**2.2.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வாடகை வருமானம் ரூபா 11,709,700 தொகை ஆகக் காணப்பட்டதுடன் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 10,640,705 தொகை ஆகும். ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 10,503,241 தொகை ஆகக் காணப்பட்டமையால் சேகரிக்கப்பட்ட வருமானம் சிட்டையிடப்பட்ட வருமானத்தை விட ரூபா 137,464 இனால் குறைந்திருந்தது. | மதிப்பீடு சரியாக தயாரிக்க வேண்டும். | கடை வாடகைக்கான புதிய பெறுமதி மதிப்பீடு செயற்படுத்தும் எதிர்பார்ப்புடன் ஆண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன் அதனை செயற்படுத்த முடியாமையே இந்த முரண்களுக்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 10 கடைகளில் இருந்து மற்றும் மீனவர் ஓய்வு கூடத்தில் இருந்து முறையே ரூபா 73,359 தொகை மற்றும் ரூபா 9,100 தொகை ஆகக் கூட்டுத்தொகை ரூபா 82,459 இற்கான வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | வருட இறுதியில் காணப்பட்ட நிலுவையில் இது வரை ரூபா 11,320 தொகை அறவீடு செய்திருந்ததுடன், செலுத்தாத 03 கடைகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 14,731,227 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 2 வருடங்கள் மற்றும் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 7,731,227 தொகை ஆகும். | முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் இது வரை ரூபா 1,000,000 தொகை கிடைத்திருந்ததுடன், மீதித் தொகையை பெற்றுக் கொள்வதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 157 இன் கீழ் 25 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 திகதி வரை 01 விடயத்திற்கு மாத்திரம் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்தது. | துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தென் மாகாண உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு மாகாண சபையினால் அங்கீகரிக்கப் பட்டிருந்த தென் மாகாண சபையினால் அங்கீகரிக்கப் பட்ட நகர துணை விதி சபையினால் ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப்பட்டது. |

**(ஆ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 7,300,000 தொகைக்கான 10 அபிவிருத்தி திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை. | பாதீட்டில் அடங்கியுள்ள அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்த வேண்டும். | மூலதன திட்டத்திலுள்ள நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்காக சபை முக்கியத்துவம் அளிக்காததுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டன. |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் சபையினால் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | செயற்திட்ட வளவுக்கு எடுத்து வரப்படும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய பொலிதீன், பிளாஸ்டிக், பத்திரிகை, டயர் மற்றும் கண்ணாடிகள் என்பவற்றை வகைப்படுத்தி திறந்த பூமியில் காற்று மற்றும மழை தாக்கம் ஏற்படக் கூடிய விதமாக குவிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உக்கப்படாத பொருட்கள் வகைப்படுத்தி தற்போது வீட்டு வளவுகளில் மேற்கொள்ளப்படுவதுடன் திறந்த வெளியில் சேகரித்தல் தற்போது நடைபெறுவதில்லை. |
| (iii) | சேதனப் பசளை உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாத பாரிய எண்ணிக்கையான குப்பை திறந்த சுற்றாடலில் குவிக்கப்பட்டு காணப்பட்டது. | உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயன்படுத்த முடியாத பகுதிகளை முறைப்படி மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அறவீடு செய்வதற்கான சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளக்க வேண்டும். | 2020-2023 ஆண்டுகளுக்கான நான்கு ஆண்டு திட்டம் தயாரிக்கும் போது இதற்கு முக்கியத்துவம் வழங்கி திட்டம் தயாரிக்கப்படும். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 34 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவியணி 09 இனை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியில் மிகைப் பதவிகளை முறைப் படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் செய்யப்பட வேண்டும். | மிகைப் பதவிகள் முறைப்படுத்து வதற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மாநகர சபையின் 19 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகள் அல்லது வேறு கடமைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உத்தியோகத்தர் கள் அங்கீகரிக் கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | நகர சபையின் நலனோம்பு சேவைகள் மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி சேவையில் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டதுடன் சபையின் ஆதனங்கள் மற்றும் வளங்களை பாதுகாப்பதற்காக போதியளவு காவலாளி இன்மையால் இதற்காக கனிஷ்ட உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த ஆண்டுகளில் சேவையை விட்டு விளகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய விழா மற்றும் இடர்கடன் ரூபா 51,135 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | அறவிடப்பட முடியாத இந்தக் கடன் தொகையை பதிவழிப்பதற்கான விண்ணப்பம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபை அனுபவித்து வரும் 14 காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமையை உரித்தாக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான ஆதனங் களை சட்டரீதியாக உரித்தாக்கு வதற்காக தங்காலை பிரதேச செயலாளர் ஊடாக உரிய நடவடிக்கை எடுப்பேன். |

**3.3.2 வருடாந்த பண்டக் கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல வருட காலம் முதல் பண்டக் கணிப்பீட்டின் மூலம் பண்டங்கள் குறைவு என இனங்கண்டிருந்த ரூபா 1,472,600 தொகை பெறுமதியான 08 பண்ட விடயங்கள் தொடர்பாக விதப்புரைகள் 2019 மார்ச் 11 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | பண்டக் கணிப்பீட்டு பரிந்துரைகளை மேற்கொள்ளப் பட வேண்டும். | பண்டங்கள் குறைவு தொடர்பாக தற்போது தேவையான சட்ட நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப் பட்டிருந்தது. |

## 3.4 பெறுகை

### 3.4.1 பெறுகை திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான விரிவான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது சரியாக பெறுகை திட்டமொன்று தயாரிக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 549,155 தொகை பெறுமதியான மூலதனச் சொத்துக்கள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் பெறுகை திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. | விரிவான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 6,769,679 தொகையாகக் காணப்பட்டதுடன் அவை 23 சதவீதம் முதல் 51 சதவீதம் வரை வீச்சில் இருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | அனுமதிப்பத்திரம் மற்றும் சேவை வருமானம் எதிர்பார்த்த வருமானத்தை விட குறைவடைந்திருந்தது. |
| (ஆ) | 03 செலவு விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 1,717,536 தொகையாகக் காணப்பட்டதுடன், அது 12 சதவீதம் முதல் 13 சதவீதம் வரை வீச்சில் இருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | உபகரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அதிகரித்தல், எதிர்பார்க்கப் படாத திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படல் மற்றும் வீதவரிக்காக வழங்கப்படும் கழிவுகளின் பெறுமதி அதிகரித்தல் என்பன காரணமாக இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 6 செலவு விடயங்களில் அனுகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 28,047,289 தொகையாகக் காணப்பட்டதுடன், அவை 9 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | ஆளுக்குரிய சம்பளச் செலவுகள் மதிப்பீடு செய்யும் போது வெற்றிடமான பதவிகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளல், இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக உத்தியோகத்தர்கள் வராமை மற்றும் மூலதன திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த நிர்மாண வேலைகள் செயற்படுத்தப் படாமை இதற்கான காரணமாக இருந்தது. |